## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No. 81/2024** |
| Prosecution witness | : | P.W. 1 |
| List of witness | : | L.W.1 |
| Name | : | சசிகலா |
| Father's /Husband Name | : | சங்கிலிமுத்து |
| Village | : | திருகாட்டுப்பள்ளி |
| Taluk | : | திருச்சி |
| Age | : | 38 |
| Occupation | : | தனியார் ஊழியர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, 10th day of March 2026.
Accused present.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருச்சி தாலுக்கா திருக்காட்டுப்பள்ளியில் வசித்து வந்து திருப்பூரில் உள்ள தனியார் கம்பெனியில் ஊழியராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. சுமார் 3 வருடங்களுக்கு முன்பு மாலை 06.00 மணியளவில் நான் நாரணமங்களம் ஆற்றங்கரைத்தெருவில் வேலைக்கு வந்திருந்த போது இரண்டு பேர் நடுவில் பிரச்சனை ஏற்பட்டுக்கொண்டிருந்தது. நான் என்னவென்று பார்க்க சென்றேன். அப்போது கூட்டமாக சத்தம் போட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது என்னை யாரோ கீழே தள்ளவிட்டார்கள். நான் கீழே விழுந்த போது அங்கிருந்த கல்லில் அடிப்பட்டு எனது தலையில் காயம் ஏற்படபட்டது. அதன் காரணமாக நான் திருவாரூர்அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சென்றேன். நான் சிகிச்சையிலிருந்த போது குடவாசல் போலீசார் என்னிடம் விசாரணை செய்து புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். நான் மேற்சொன்ன சங்கதிகளை தான் போலீசாரிடம் கூறினேன். தற்போது என்னிடம் காட்டடப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 154 பிரிவின் கீழ் அரசு தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி**

**கோரியதன் பேரில் வழக்கு கோப்பின் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

நானும் எதிரியும் எனது ஊர்க்காரர்கள் முன்னிலையில் பேசிக்கொண்டு சமாதானம் செய்துகொண்டோம் என்றால் சரிதான்.

கடந்த 15.01.2023 ம் தேதி எதிரிக்கும் எனக்கும் மாலை சுமார் 07.00 மணியளவில் எதிரி எனது கணவரை குச்சிகாரி உன் புருஷன் எங்கடி வெளியே வர சொல்லுடி என்று தேவையில்லாமல் சண்டைபோட்டார் என்றும் ஏன் இப்படி பேசுகிறாய் என்று நான் கேட்டபோது கீழே கடந்த கல்லால் என்னை அடித்தார் என்றும், சத்தம் கேட்டு ஓடி வந்த எனது கணவரையும் தேவடியா மகனே குச்சிக்காரி மகனே உன்னைதான் தேடினேன் என்று சொல்லி கல்லால் அடித்தார் என்றும் அதில் எனக்கு தலையில் காயமும் என் கணவருக்கு இடது காலில் காயமும் ஏற்பட்டது என்றும் நாங்கள் இருவரும் சத்தம் போடவும் உங்களை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டி விட்டு சென்றார் என்றும் அதன் காரணமாக ஏற்பட்ட காயத்தால் நானும் எனது கணவரும் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றோம் என்றும் புகார் வாக்குமூலத்திலும் போலீசார் விசாரணையிலும் கூறிவிட்டு தற்போது எதிரியுடன் சமாதானம் செய்து கொண்டதால் எதிரிக்கு ஆதரவாக உண்மை சம்பவத்தை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

எதிரியுடன் நானும் எனது கணவரும் சமாதனம் செய்து கொண்டோம் என்றால் சரிதான். எதிரி என்னை மிரட்டியோ வற்புறுத்தியோ சமாதானம் ஆக சொல்லி சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிக்கும் இந்த வழக்குக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான்.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.06 17:03:18 +0530

`

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.